பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5·00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 28 புதன்கிழமை (10 06-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 195

# திருமலை, மன்னார் தாக்குதல்களில்

# 17 படையினர் பலி!

## பெருமளவு ஆயுதங்களும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

திருகோணமலை, மன்னார் மாவட்டங்களில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய இருவேறு அதிரடித் தாக்குதல்களில் 17 க்கும் அதிக படையினர் உயிரிழந்தனர். இரு தாக்குதல்களின் போதும் பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

நேற்றுக் காலை திருகோணமலை மாவட்டத்திலுள்ள மகிந்தபுர இராணுவ முகாமிலிருந்து அரிப்புச் சந்திக்கு ரோந்து சென்ற — நாற்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினரைக் கொண்ட — அணி மீது விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் ஒருவர் இராணுவ அதிகாரி என்று கொழும்பில் பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை —

நேற்றுக் காலை 7 மணியளவில் மன்னார் திருநாவல்குளம் இராணுவ முகாமிலிருந்து முருங்கன் வீதி வழியாக வந்த இராணுவத்தினர் மீது மற்றொரு தாக்குதல் நடத்தப்பட்டது.

சுமார் இருபத்தைந்துக்கும் அதிகமான படையினரைக் கொண்ட இந்த இராணுவ அணி மீது சுமார் ஐந்து நிமிட நேரம் நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில் நான்கிற்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலில் 4 படையினர் உயிரிழந்தனர் என்றும் ஏழு படையினர் காயமடைந்தனர் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

[உ எ-த-10]

## வடக்கில் ஊரடங்கு!

கொழும்பு, ஜூன் 10

வவுனியா மாவட்டம், மன்னார்த்தீவு மற்றும் யாழ். குடாநாட்டில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுகள் தவிர்ந்த வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளில் இன்று காலை 8 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வரும் என்று கூட்டுப் படைகள் தலைமை அலுவலகம் நேற்று அறிவித்தது.

(உ-எ-10)

## பின்வாங்கினர்

யாழ்ப்பாணம், ஜூன் 10

அலம்பில் பகுதியிலிருந்து முன்னேறி குமுழமுனையைக் கைப்பற்ற படையினர் எடுத்த முயற்சி கைகூடவில்லை. படையினர் தம் முயற்சியைக் கைவிட்டு அலம்பில் பகுதிக்குப் பின்வாங்கிச் சென்றனர் என்று அறியவருகிறது.

## மன்னார் தாக்குதலில் கைப்பற்றப்பட்டவை

மன்னார் மாவட்டத்தில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ★ ஏ கே.எல் எம்.ஜி. — 01
- ★ அதற்குரிய மகஸின் — 08
- ★ ரி 56-1 ரகத் துப்பாக்கி — 01
- ★ ரி 56 - 2 ரகத் துப்பாக்கி — 01
- ★ அதற்குரிய மகஸின் — 08
- ★ ரி 81 ரகத் துப்பாக்கி — 01
- ★ லிங்குடன் ஐ. எம். ரவை — 671
- ★ ஐ. எம். ரவை — 234
- ★ ஏ. கே. ஹோல்ஸர் — 02
- ★ ஜே.ஆர். கிரனேட் — 06
- ★ மற்றும் இராணுவத் தளபாடங்கள்.

[உ-த]

## 10 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 10

திருமலை, மன்னார் மாவட்டங்களில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் பத்துப் போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

திருமலைத் தாக்குதலில் வீரமரணமடைந்த ஏழு போராளிகளும் வருமாறு:

மேஜர் வெற்றிச்செல்வன் அல்லது கெரில்லா [அழகையா சோமளேஸ்வரன் — மூதூர்]. லெப்ரினன்ட் மலையமான் அல்லது நந்தி [தேவ

[6ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சியில் ஆசிரியர் பகிஷ்கரிப்பு

கிளிநொச்சி, ஜூன் 10

கிளிநொச்சி புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க வித்தியாலய ஆசிரியர்கள் தொடர்ந்து ஆறாவது நாளாக வகுப்புகளைப் பகிஷ்கரித்துப் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

பாடசாலையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக மாணவர்கள் சிலரை ஆசிரியைகள் தண்டித்ததாகவும் —

பின்னர் சம்பந்தப்பட்ட ஆசிரியைகளை சிலர் தாக்க முற்பட்டதாகவும் —

அதனை அடுத்தே ஆசிரியர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர் என்றும் — சொல்லப்படுகிறது.

> காடு அழியின் நாடு அழியும்!

## காங்கிரஸ் வெற்றி!

புதுடில்லி தெற்கு நாடாளுமன்றத் தொகுதியில் — இரு நடிகர்களுக்கு இடையில் நடந்த தேர்தல் போட்டியில் — இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் ராஜேஷ் கன்னா

[6ஆம் பக்கம் பார்க்க]

## 20ஆம் திகதிக்கு பின்பே கூடும்

மங்கள முனசிங்கா தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு, பெரும்பாலும் இம்மாதம் 20ஆம் திகதிக்குப் பின்னரே கூடும் என்று அறியப்படுகிறது.

குழு அங்கத்தவர்களில் மூவர் ஹஜ் யாத்திரை சென்றுவிட்டதால் அவர்கள் நாடு திரும்பிய பின்னரே குழு கூடும் எனச் சொல்லப்படுகிறது.

[அ-எ]

## திருமலைத் தாக்குதலில் கைப்பற்றப்பட்டவை

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று நடத்தப்பட்ட தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

- ★ ரி56 - 2 ரகத் துப்பாக்கி — 4
- ★ ரி 56 - 1 ரகத் துப்பாக்கி — 5
- ★ அதற்குரிய மகஸின் — 30
- ★ ரி81 ரகத் துப்பாக்கி — 2
- ★ அதற்குரிய மகஸின் — 9
- ★ நடுத்தர ரவைகள் — 1,371
- ★ ஹோல்ஸர் — 10
- ★ ஜே. ஆர். கிரனேட் — 1
- ★ மிதிவெடி அகற்றி — 1
- ★ உராய்வு நீக்கித் தாங்கி — 1
- ★ மற்றும் ராணுவத் தளபாடங்கள்.

[உ-த]

## பாவனைப் பொருள் விலை 2ஆம் சுற்றும் உயரும்!

கொழும்பு, ஜூன் 10

இலங்கை ரூபாவின் மதிப்பு அமெரிக்க டொலருக்கும் பிரிட்டிஷ் ஸ்டேர்லிங் பவுணுக்கும் எதிராகக் குறையத் தொடங்கியிருப்பதால் இறக்குமதிப் பொருள்களின் விலைகளில் மேலும் ஒரு சுற்று விலை அதிகரிப்பு ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிதித்துறை வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது

பாதுகாப்பு வரியை ஒருசத வீதத்தில் இருந்து 3 சதவீதமாக அதிகரித்ததைத் தொடர்ந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டது.

அத்தியாவசியப் பொருள்களான மருந்துகள் மற்றும் பால்மா வகைகளின் விலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## சபாநாயகருக்கு எதிரான பிரேரணை தோற்கடிப்பு

சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று 50 பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணைக்கு சாதகமாக 68 வாக்குகளும் எதிராக 118 வாக்குகளும் கிடைத்தன.

பிரேரணைக்கு ஆதரவாக சுதந்திரக் கட்சி, ஐக்கிய சோஷலிச அணி மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் எம்பிக்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. வே. நவரத்னம் திரு ராஜா குகனேஸ்வரன், திரு. இமானுவல் டி சில்வா ஆகியோரும் வாக்களித்தனர்.

எதிராக ஐக்கிய தேசியக் கட்சி எம். பிக்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்களும் சுயேச்சை எம். பி. பஷீர் தாவூத், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு. ஜே. திவ்யநாதன், திரு. கருணாகரன் ஆகியோரும் வாக்களித்தனர்.

கடந்த எட்டு மாத காலத்துக்குள் சபாநாயகருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட மூன்றாவது நம்பிக்கையில்லாப் பிரேரணை இது என்பது குறிப்பிடத்தக்கது.

[உ-எ-10]

## புலிகள் அழைத்தால் பேச்சு நடத்த தயார்!

### தொண்டமான் மீண்டும் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 10

விடுதலைப் புலிகளிடம் இருந்து கடிதம் மூலம் அழைப்பு வந்தால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருக்கிறேன்.

இ. தொ. கா. தலைவரும் உல்லாசப் பயண, கிராமியக் கைத்தொழில்துறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-த)

## தெல்லிப்பளைப் பகுதிக்கு அவர்களையும் கூட்டிவர ராணுவ உயர்பீடம் திட்டம்!

கொழும்பு, ஜூன் 10

குடாநாட்டில் — குறிப்பாகத் தெல்லிப்பளைப் பகுதியில் — நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்காப் படைகளுக்கு உதவுவதற்காக, ரெலோ புளொட், ஈ. பி. டி. பி ஆகியவற்றைச் சேர்ந்தோர் அங்கு அனுப்பி வைக்கப்படுவர்.

தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

பாதுகாப்புப் படைகளின் உயர்நிலைப் பீடம் இது குறித்து கொள்கை அளவில் முடிவு செய்திருப்பதாகவும் —

இக் குழுக்களைச் சேர்ந்தோரை அங்கு அனுப்புவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருக்கிறது.

கிழக்கு மாகாணம், வன்னி மற்றும் தீவுப்பகுதி ஆகியவற்றில் மட்டுமே சமூகவிரோதக் குழுக்களின் செயற்பாடு தற்சமயம் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்புப் படைகளின் உயர்நிலைப் பீடத்தின் தீர்மானத்தை அடுத்து மேற்படி குழுக்களுக்கு வழங்கப்பட்டு வரும் இராணுவ உதவிகளை அதிகரிக்கவும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் —

[6ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Northern Province Affiliated University College
## Vacancies for Academic and Academic Support Staff

**(PERMANENT / VISITING)**

Applications are invited from suitably qualified persons for the following posts.

1. **College Lecturer (Probationary) in Mathematical Science**
**Salary Scale: Rs. 3 900 — 6x100 — 4,500p.m.**

**QUALIFICATIONS:**

i. First or Second Class Special Degree from a recognized University in Mathematical Sciences or Equivalent qualifications

or

ii. Pass in a Special Degree with a Post-graduate qualification in Mathematical Sciences.

or

iii. Such other qualifications as approved by the University Grants Commission

2. **College Lecturer (Grade II) in Mathematical Science**
**Salary Scale: Rs. 4 500 — 16x200 — 7,700 p. m**

**QUALIFICATIONS:**

Qualifications at (i) or (ii) or (iii) above and 3 years teaching / research experience in a recognized institution.

and

Postgraduate qualifications in the field of Mathematical Sciences, duration of which shall not be less than 01 year.

3. **Senior Lecturer in Mathematical Science**
**Salary Scale: Rs 8,000 —05x250 — 9,250 p.m.**

**QUALIFICATIONS:**

1. (a) A First or Second Class (Upper-Division) in a Special Degree in a relevant subject.

or

(b) A Second Class (Lower Division) in a Special Degree in a relevant subject

or

(c) Such professional qualifications as may be approved by the University Grants Commission upon the recommendation of the Higher Educational Institution concerned

2. (a) A postgraduate research degree in the relevant field, provided that the prescribed period of registration for such degree was not less than two academic years

or

(b) Such professional qualifications as may be approved by the University Grants Commission upon the recommendation of the Higher Educational Institution concerned

and

3. At least six years (06) experience including the time devoted to acquiring the qualifications specified at (2) above in one or more than one of the following,

(i) Teaching at University level,
(ii) professional experience,
(iii) Research in a recognized institution.

4. **Instructor in Computer Technology - (Grade II)**
**Salary Scale: Rs. 3,900 - 3x150—4,350 EB, Rs. 4,950—13x200—7,550p.m.**

**QUALIFICATIONS:**

i. A degree of a recognized University or equivalent
ii. Previous experience in a field of or related to Computer Technology

5. **Instructor in English (Grade III)**
**Salary Scale: Rs. 3,000 — 6x80— 3,480p.m.**

**QUALIFICATIONS:**

First Class Special English Trained Teachers Certificate with at least 10 years experience in teaching English

6. **Instructor in English (Grade II)**
**Salary Scale: Rs. 3,500 —10x100— 4,500p.m.**

**QUALIFICATIONS:**

A pass in the General/Special degree with English language as a subject

or

A pass in the General/Special degree with approved qualifications in the Teaching of English as a second language

7. **Tutor in Mathematical Sciences (Temporary)**
**Salary Scale: Rs. 3,000 p.m all inclusive**

**QUALIFICATIONS:**

A degree of a recognized University in Mathematical Science

8. **For posts mentioned from 1 to 6, both Permanent and Visiting positions are available.**

Visiting staff will be paid according to University rates and in addition travelling will be paid at the approved rates.

9. Applications giving full name, address, date of birth, age, educational and professional qualifications, experience and any other relevant information with names and address of two referees, should be sent to the **Assistant Registrar, Northern Province Affiliated University College, Railway Station Road, Vavuniya** to reach him on or before **27th June 1992.**

The top left hand corner of the envelope should be marked 'Post of Academic and Academic Support Staff'.

10. Applications from employees of University Grants Commission and Higher Educational Institutions / Institutes / Government Departments State Corporations and Statutory bodies should be channelled through the Head of respective institutions.

However, applicants are advised to send a copy of their applications direct to the address given above.

Applications received after the closing date and incomplete applications will not be considered.

**— DIRECTOR.**

**Northern Province Affiliated University College,**
Railway Station Road,
Vavuniya.
01st June 1992 (G-2399)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 05 — 03 — 1956



மறைவு: 11 — 05 — 1992

## அமரர் வே. சித்திவிநாயகம்

*[வடக்கு - கிழக்கு மாகாணசபை பொறியியலாளர், Rock Engineer, கிளிநொச்சி]*

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு, பல்வேறு வகைகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மற்றும் மலர்வளையங்கள் சாத்தியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் கோப்பாய் இல்லத்தில் இன்று (10-6-1992) இடம்பெற இருக்கும் அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய நிகழ்ச்சிகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

முதலியார் வளவு,
கோப்பாய். [21251]

# இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். மிட்ரவுண் றோட்டறக்ட் கழகத்தின் ''சுகநலம்'' கூத்து கல்லூரி மாணவர்களுக்காக இன்று யாழ். மத்திய கல்லூரியிலும், உடுவில் மகளிர் கல்லூரியிலும் நடத்தப்படும்.

இரவு நிகழ்ச்சியாக சட்டநாதர் சிவன் கோவிலுக்கு முன்பாகவுள்ள அரங்கில் இக்கூத்து நடைபெறும். (த)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 10

சுழிபுரம் காட்டுப்புலம் அ. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

பண்டத்தரிப்பு கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. க. மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [உ-99]

★ ★ ★

கிளிநொச்சி, ஜூன் 10

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை, சுதேச மருத்துவத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் வட்டக்கச்சியில் நிறுவியுள்ள மருந்துத் தொழிற்சாலை இன்று காலை திறந்து வைக்கப்படும். இந் நிகழ்ச்சிக்கு பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திரு. கிருஸ்ணசாமி தலைமை வகிப்பார்.

மருந்துத் தொழிற்சாலையை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் திறந்து வைப்பார்.

வட்டக்கச்சி கிருஷ்ணர் ஆலயத்தில் இருந்து சுதேச மருத்துவ ஏட்டுச்சுவடி ஊர் வலமும் இடம்பெறும். [உ-76]

# பென்ஷன் வவுச்சர்

வரணி, ஜூன் 10

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டன. அவை இன்று உரியவர்களுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-170)


# அறிவித்தல்

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த பாலம் பொதுப்பணி மன்றம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் ஏதும் இருப்பின் 15 06-92க்கு முன்னர் 83/2, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நேசன்
நிர்வாகி
10-06-92 [21347]

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளச் சந்தி,
யாழ்ப்பாணம்.

**A/L 92**

Paper Class

புவியியல்
குணராசா
13 - 06 - 1992
(4 மணி)

★ முன்கூட்டியே அனுமதிகளைப் பதிவு செய்து கொள்ளவும். [கி-2668]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 10

ஆயுதங்களைக் கடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்ட சுவிற்சர்லாந்து பிரஜையான அலன்கிறிஸ்டீன் ஷொவார் [வயது 44] என்பவரை இம்மாதம் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீர்கொழும்பு நீதிவான் ஆர். இளையபெருமா உத்தரவிட்டார். (ஒ-எ)

## மதுரையில் இலங்கையர் கைது!

சென்னை, ஜூன் 10

மதுரை மாவட்டம் ஊமச்சிக் குளத்துக்கு அருகில் பரசுரம்பிட்டி பொலீஸார் சண்முகம் [25 வயது] என்ற இலங்கையரைக் கைது செய்துள்ளனர்.

கள்ளநோட்டு அச்சடிக்கும் முயற்சியில் இவர் ஈடுபட்டு இருந்திருக்கலாம் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இவரது வீட்டில் இருந்து நூறுரூபா அளவுடைய வெள்ளைக் கடதாசிக் கட்டுகளையும், இரசாயனப் பொருள்களையும் பொலீஸார் கைப்பற்றினர். [ஓ-3]

## இலவச தையல் பயிற்சி

அராலி, ஜூன் 10

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினர் வலி-மேற்கைச் சேர்ந்த படித்த யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சி நெறி ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

இப் பயிற்சி நெறியில் முதல் தொகுதியாக 165 யுவதிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். [த-12]

## சுன்னாகத்தில் அஞ்சலி

மயிலணி, ஜூன் 10

தெல்லிப்பழைப் பகுதியில் இடம் பெற்ற மோதலில் வீர மரணமடைந்த வீர வேங்கைகள் கனகலிங்கம் பாண்டியன், கந்தையா மகிழ்தராஜ் ஆகியோரின் புகழுடல்கள் அண்மையில் சுன்னாகம் பகுதியில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன

பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். அஞ்சலி உரைகளும் நிகழ்த்தப்பட்டன.

இறுதியில் சுன்னாகம் சந்தி வரை ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட புகழுடல்கள் பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. [த-89]

## குமண கப்பல் 16 ஆம் திகதி புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 10

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக தம்மைப் பதிவு செய்து கொண்ட நோயாளர்களுடன் குமண கப்பல் எதிர்வரும் 16 ஆம் திகதி பருத்தித்துறையில் இருந்து புறப்படுகிறது. [இ-15]

## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 10

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் இன்று புதன்கிழமை முதல் மூன்று நாட்களுக்கு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் தத்தமது பகுதி சனசமூக நிலையங்களில் சென்று வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசியை போட்டுக் கொள்ளுமாறு கொக்குவில் பொது சுகாதார பரிசோதகர் நல்லூர் பிரதேச சபையூடாக கேட்டுள்ளார். [இ-5]

# மட்டக்களப்பு நகரப் பகுதி பொலீஸாரால் சுற்றிவளைப்பு

## மக்கள் மத்தியில் பெரும் பதற்றம்

மட்டக்களப்பு ஜூன் 10

மட்டக்களப்பு நகரப் பகுதியைக் கடந்த ஞாயிறன்று முற்பகல் 11-00 மணியளவில் பொலீஸார் திடீரென சுற்றிவளைத்தனர்.

இதனால் நகர மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

வீதிகள், டியூட்டறிகள், பொது இடங்களில் காணப்பட்ட ஆண்கள், பெண்கள் அனைவரையும் கூட ஆலயங்களில் கூடுமாறு அறிவிக்கப்பட்டது

ஆலயங்களில் கூடியவர்களைப் பொலீஸார் துருவித் துருவி விசாரணை செய்தனர். மாலை வரை விசாரணை நீடித்தது.

அனேகமானோர் பின்னர் விடுவிக்கப்பட்டனர் சிலர் மேல் விசாரணைக்காக பொலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர். [ஓ-3]

## திருச்சி முகாமில் இருக்கும் ஈழ வாலிபர்கள் மூவரை சந்திக்க அனுமதி கோரி மனு

சென்னை, ஜூன் 10

திருச்சி அகதி முகாமில் இருக்கும் இலங்கை வாலிபர்கள் மூவரைப் பார்க்க அனுமதி வழங்க வேண்டும் என்று நாமக்கல்லைச் சேர்ந்த அகமத் என்பவர் சென்னை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

சங்கர் [24 வயது], குமார் [22 வயது], நிருபன் [26 வயது] ஆகிய மூன்று பேரையும் பார்க்கவே அனுமதி வழங்குமாறு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இம்மூவரும் திருச்சி உறையூர் முகாமில் தற்சமயம் வைக்கப்பட்டுள்ளதாகவும் — இவர்களைப் பார்வையிட அதிகாரிகள் அனுமதிக்கிறார்கள் இல்லை என்றும் — மனுவில் கூறப்பட்டுள்ளது. [ஓ-3]

## சபாநாயகர் மக்கா பயணம்

கொழும்பு, ஜூன் 10

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது ஹஜ் யாத்திரை மேற்கொண்டு மக்கா பயணமானார். [இ-த]

## தமிழ்ப் பண்பாட்டு மாநாடு சிட்னியில்

கொழும்பு, ஜூன் 10

5 ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடு அக்டோபர் மாதம் 3 ஆம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற உள்ளது. [இ-த]

## 2,370 தாக்குதல்கள்

ஜேர்மனியில் வெளிநாட்டவர் படையெடுப்பைக் கண்டித்து கடந்த வருடம் வலதுசாரிகள் அகதிகள் மீது 2 ஆயிரத்து 370 தாக்குதல்களை நடத்தியுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## கண்டனம்

கொழும்பு, ஜூன் 10

இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுவோரை அவதூறும் செய்யும் விதத்தில சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் சிலர் நடந்து கொண்டதை கொழும்பில் உள்ள 20 பள்ளிவாசல்களைச் சேர்ந்த தர்மகர்த்தாக்கள் கண்டித்துள்ளனர். [இ த]


# மிருதங்க அரங்கேற்றம்



காலம்:

11 - 06 - 1992

(நாளை)

வியாழன் மாலை 5-30

## செல்வன் சுப்பிரமணியம் கமலதாஸ்

ஸ்வரஞான சாகித்திய நாதஸ்வர இசையரசு
யாழ்ப்பாணம்: N. R. கோவிந்தசாமிப்பிள்ளை,
லயஞான திலகம், யாழ்ப்பாணம் N. R. சின்னராசா,
பிரபல்ய நாதஸ்வர வித்துவான் N. R. சந்தான கிருஷ்ணன்
ஆகியோரது மருமகனும் சங்கீத ரத்தினம் சி. மகேந்திரன்
(யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு)
அவர்களது மாணவனுமாகிய
செல்வன் சுப்பிரமணியம் கமலதாஸ் அவர்களுடைய
மிருதங்க அரங்கேற்றம்

இடம்: இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில்

தலைவர்: கவிஞர் சோ. பத்மநாதன் (உப - அதிபர் பலாலி ஆசிரிய கலாசாலை)

பிரதம விருந்தினர்: பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)
திரு. து. வைத்திலிங்கம் (மாவட்ட பிரதி ஆணையாளர், மாகாண சபை)

★ இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, வருகை தந்து இவ்விளங் கலைஞனை ஆசீர்வதிக்குமாறு உறவினர், நண்பர்கள், கலைஞர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

நாதஸ்வர வித்துவான்,
ஆர். வி. சுப்பிரமணியம் குடும்பத்தினர்.

[21334]



## ★ முதலாவது பிறந்த தின வாழ்த்து ★

### செல்வன் செல்வராஜா திலக்

செல்வராஜா - வனஜா தம்பதிகளின் செல்வப் புதல்வன் திலக் இன்று [10-6 92] தனது முதலாவது பிறந்த நாளை கொழும்பில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை கொழும்பிலுள்ள அப்பா, அம்மா பெரியமாமா, மாமி, சின்ன மாமா, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அம்மம்மா, அன்ரா, அப்பம்மா, அத்தைமார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று, வேம்படி - சித்தி விநாயகர் அருளால் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(21324)



உ
சிவமயம்

## உபநயன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஆங்கிரச வருஷம் வைகாசி 29 ஆம் நாள் [11-6-92] வியாழக்கிழமை காலை 8-41 முதல் 9-53 வரையுள்ள சுபவேளையில்,

எமது துவிதீய புத்திரன்
சிரஞ்சீவி
★ சிவசுந்தர சர்மா ★
அவர்களுக்கு

யக்ஞோபவீத தாரண பிரம்மோபதேசம் செய்யத் திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், தாங்கள் குடும்ப சகிதம் வந்து செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
சிவ. நாகேஸ்வரக் குருக்கள்
குடும்பத்தினர்.

மயிலணி,
சுன்னாகம்.

[20591]



தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## நல்லின பசுமாடுகள் பகிரங்க ஏலவிற்பனை

எமது சங்கத்தின் கால்நடைப் பண்ணையில் உள்ள நல்லின கறவைப் பசுமாடுகள் எதிர்வரும் 13-06-1992 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சுதுமலைச் சந்தியிலுள்ள வில்லியம் மேதர் சேச் [William Mathar Church]க்கு அருகில் அமைந்துள்ள திரு. ம. மகேந்திரன் அவர்கள் இல்லத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனையில் மாடுகளைப் பெற்றுக்கொள்பவர்கள் உடனடியாகச் சங்கக் காசாளரிடம் பணத்தைச் செலுத்தி மாடுகளை உடன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

– பொது முகாமையாளர்.

09-06-1992 [21340]



## உள்ளூர் சிமெந்து / கட்டடம்

எமது உயர்தர, உள்ளூர் கட்டட சிமெந்தை விற்பதற்கு முற்பணம் செலுத்தக் கூடிய விற்பனை முகவர்கள் தேவை. தனியாருக்கு 500 கிலோவுக்கு மேற்பட்ட சிமெந்து ஓடர்கள் கவனிக்கப்படும்.

கிலோ 10/-.

கட்டடப்படங்கள்,
மதிப்பீடுகள்,
ஆலோசனைகள்,
ஒப்பந்தங்கள்

செய்து கொடுக்கப்படும்

J. C. N. சோமநாதர்,
'பிறேம வாசா', சதீஸ் வீதி,
உசன் - மிருசுவில்.

[4726]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr. வீ. சபாரத்தினம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. [மாவடிச் சந்திக்கு அண்மையில்]
[4745]

### கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கோல்டன் கொமெற பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. ஓடருக்கும் எடுத்துக் கொடுக்கப்படும். காலை 6-00 மணி தொடக்கம் 11-00 மணி வரை. தொடர்பு கொள்ளவும். ரவி றேடர்ஸ், பழக்கடை, திருநெல்வேலிச் சந்தி. [21339]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Golden Comet பேட்டுக் குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, இல.119, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி. நல்லூர், [21312]

### அச்சுக் கோர்ப்பாளர் தேவை

அச்சுக் கோர்ப்பாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கவும். பாரதி பதிப்பகம் (A. B. Printers), 430 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[சி/2667]

### முகவர்கள் தேவை

யாழ். குடாநாட்டில் எல்லா இடங்களிலும் முகவர்கள் தேவை. மாதம் 500/- ரூபாவுக்கு மேல் வருமானம் கிடைக்கும். விவரங்களுக்கு சுவாமியார் இராசகுலசிங்கம், இல. 53/5, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம்.
[21332]

### மணப் பெண்கள் தேவை

கனடா, அவுஸ்திரேலியா, U.K, டென்மார்க், நோர்வே, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் தொழில் புரிவோருக்கு மணப்பெண்கள் தேவை. இலங்கை வந்து பதிவுத் திருமணம் செய்து அழைத்துச் செல்வார்கள். புதிய மாங்கல்யா மல்ரி சேவிஸ், இல. 361, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
[21323]

இந்து சமயம், 29 வயது, பூசம் நட்சத்திரம், செவ்வாய் 6, நல்ல குடும்பம். குடிப்பழக்கம் அற்ற, அரசாங்க ஊழியருக்கும், கிறிஸ்தவ சமயம், வயது 28, சுவிற்சர்லாந்தில் தொழில் புரிபவருக்கும மணப் பெண்கள் தேவை. R. மகேந்திரன், இல. 73, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். [21338]

### இலவச திருமண சேவை

34 வயது, பூசம், செவ்வாய் - 7, கிறீக் கப்பலில் மின்சார தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கு மணமகள் தேவை. இலங்கையில் திருமணம் செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[4743]

29 வயது, ஆயிலியம், செவ்வாய் 2, B.Com. தற்போது சுவிஸில். கனடா அல்லது அவுஸ்திரேலியா மணமகளை விரும்புகிறார். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[4737]

### கராட்டி வகுப்புகள்

12-06-1992 மாலை 4-00 மணியளவில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் புதிய கராட்டி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. ஆசிரியர்கள் செ. கனேசலிங்கம், த. ராஜ்லோஜநசனன். வழமையான வகுப்புகள் திங்கள், வெள்ளி ஆகிய நாட்களில் காலை 5-30 மணிக்கும், மாலை 4-00 மணிக்கும் நடைபெறுகின்றன.
[21329]

## மலேரியா தடுப்பு மருந்துக்கு தட்டுப்பாடு

கொழும்புத்துறை, ஜூன் 10

யாழ். மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளில் மலேரியா நோய்த் தடுப்பு மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குளோரோகுயின் பிறிமாகுயின் எனப்படும் மேற்படி இரு மருந்து வகைகள் போதுமான அளவு யாழ் மாவட்ட மருந்துக் களஞ்சியங்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

சாந்தி சினிமா முன்பாக (மேல் மாடியில்)

G. C. E. O/L, A/L
Arts, Commerce and Science

Short - Hand Typing இரு மொழிகள் மூலமும்;
Spoken English ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.

### புதிய பிரிவுகள்

ஆரம்பம்: 13-06-1992

[4747] — நிர்வாகி.

## நெஞ்சில் நிறைந்த 60ஆவது நாள் நினைவலைகள் ....

தோற்றம்:
21-07-1939



மறைவு:
10-04-1992

அமரர்
### யேசுதாசன் அமிர்தராஜ் யோன்
[உப - முகாமையாளர், இலங்கை வங்கி, சுன்னாகம்]

''உள்ளத்துப் பொய்யாது ஒழுகின் - உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் உளன்''

சுன்னாகம் கிளையின் மூலம் வங்கிக்கும் வாடிக்கையாளர்களுக்கும் ஆற்றிய சேவைகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

இலங்கை வங்கி விளையாட்டு நலன்புரி - இலக்கியக் கழகம்,
சுன்னாகம்.

இலங்கை வங்கி,
சுன்னாகம்.
[20592]

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
# பரிசுத்தினம்

காலம்: 11 - 06 - 1992 வியாழக்கிழமை காலை 10 மணி.
இடம்: கல்லூரி குமாரசுவாமி மண்டபம்.
பிரதம விருந்தினர்: திரு. க. பரமேஸ்வரன் அவர்கள்.
[பதிவாளர் - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்]
பரிசில் வழங்கல்: திருமதி ஜெயமலர் பரமேஸ்வரன் அவர்கள்.

பெற்றோர், பழைய மாணவர், முன்னாள் ஆசிரியர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.)

அதிபர், ஆசிரியர், மாணவர்.

யாழ். இந்துக் கல்லூரி
09 06 - 1992 [சி-2400]

## 31ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம்: 27 — 03 — 1948
மறைவு: 11 — 05 — 1992

### திருமதி சுப்பிரமணியம் பராசக்தி

அம்மா! நீங்கள் சிவபதமடைந்து திங்களொன்று ஆனாலும், உங்கள் நினைவு என்றும் எங்கள் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள், தாய்,
சகோதரர்கள், சிறிய தந்தை.

932/21, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [21319]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



ஜனனம்: 1942 — 07 — 18
மரணம்: 1992 — 05 — 11

### றிச்சாட் பெனடிற்றம்மா

எம் குடும்பத்தின் குலவிளக்கே! அணையா தீபமாய், எம் வாழ்வின் ஒளி விளக்காய்த் திகழ்ந்தவளே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி, மீளாத் துயில் கொண்டாயோ! உன் மலர் வதன புன் சிரிப்பு நீங்கா நினைவுகளாய் துயர் நிலை கொண்டதம்மா! காலமெல்லாம் நாங்கள் கண்ணீர் கவலையுடன் வாழ வானகம் சென்றாயோ? தாயே என்று சொல்ல தரணியில் யாருமில்லை - நாம் சேயாய் நின்று உம் அடி சேவைகள் செய்வதெப்போ!

வாழ்வின் துணை என்றெண்ணி பாசமெனும் ஆசை கொண்டு அன்பாய் வாழ்ந்தவளே! நேசக் கரம் நீட்டி, உத்தமியாய், பத்தினியாய் வையகம் வாழ்ந்தவளே! வேகுதம்மா உள்ளம், வெடிக்குதம்மா நெஞ்சம், நீங்கா நினைவலைகள் எம் மனக்கண் முன் வந்து, வந்து வருத்துதம்மா!

இவரின் சுகயீனமுற்ற காலத்திலும், இறுதிக் கிரியைகளில் கலந்தும், பல உதவிகளையும், ஒத்துழைப்பையும் நல்கிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்.

22, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். [21336]

## உதயன்

### போர்வை கிழிந்தது!

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் தனது பொறுப்பில் இருந்து நழுவி வந்த, கண்ணாமூச்சி விளையாடி வந்த பிரேமதாசா - ஐக்கிய தேசியக் கட்சி—அரசு ஆகப் பிந்தித் தனது பொறுப்பை எதிர்க் கட்சி எம். பி. ஒருவரின் தலைமையில் உள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சுமத்தியிருந்தது பழைய கதை.

தமிழர் பிரச்சினையைத் தீர்க்க முழுக்க, முழுக்க நாடாளுமன்றத் தெரிவுக் குழுவையே நம்பியிருப்பதாக ஜனாதிபதியும், அமைச்சர்களும் அடிக்கடி கூறி வந்தார்கள்.

ஆனால் அவர்களின் ஏமாற்று வித்தை பிழைத்துப் போகலாம் என எதிர்பார்க்கப் பட்டது. தெரிவுக்குழு இயங்குவதிலேயே பெரும் சிக்கல்கள் தோன்றின. அது உடைந்து விடுமோ என்ற ஆபத்தும் தென்பட்டது.

அதன் பிரதான சுவர்களில் ஏற்பட்ட வெடிப்புகளைப் பூசி மெழுகியேனும் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தெரிவுக் குழு வகுக்குமானால் அது இந்த நாட்டின் அரசியல் சரித்திரத்தில் பெரும் சாதனையாகக் கருதப்பட வேண்டியதாகும்.

தெரிவுக் குழு இடறுப்பட்டும், விழுந்தும், புரண்டும், ஊர்ந்தும், எழும்பியும் ஒரு தீர்வுத் திட்டத்தை வகுத்தால் கூட, அது இனப்பிரச்சினை நாடகத்தின் கதாநாயகனான தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற மாட்டாது என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

இனப்பிரச்சினைக்குத் தனது சொந்தத் தீர்வுத் திட்டத்தை முன் வைக்காத அரசு, வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட வேண்டும் (இணைக்கப்படக் கூடாது) என்று தெரிவுக்குழுவிடம் யோசனை தெரிவித்திருக்கிறது! அதன் அண்மைக் காலப் போர்வை கிழிந்துவிட்டது!! உண்மை உருவம் நன்றாகத் தெரிகிறது!!!

ஐ. தே. கவின் இந்த நிலைப்பாடு ஏனைய சிங்களக் கட்சிகளுக்குப் பிரதான பிடியாகவும், முன்னுதாரணமாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

எல்லாச் சிங்களக் கட்சிகளும் ஏகோபித்த குரலில் வடக்கு-கிழக்கைப் பிரிக்கும் ஓர் அடிப்படையுடனேயே தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கப்போகின்றன. குழுவில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் எப்படிக் கூக்குரல் இட்டாலும் அது காட்டுக் கூச்சலாகக் கருதப்படுமே அன்றிக் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. சனநாயக முடிவு என்பது அது தானே..!

வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்ட அடிப்படையில் அமைந்த தீர்வு ஒன்றைத் திணிப்பதற்காகவே, புலிகளை இரண்டு மாதங்களில் ஒழித்து விடுவோம் என்ற கதையும், அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் களைந்து விடுவோம் என்ற பேச்சும் மிதக்கவிடப்படுகின்றன. இரட்டை அணுகுமுறை என்பதும் அதன் பாற்பட்டதே.

'ஈழம் யுத்தம்—3' தொடங்கி இரண்டு வருடங்கள் முடிவடையும் தறுவாயில், தமது அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாத எந்தத் தீர்வையும் சிங்களவர்கள் தம் மீது திணிப்பதற்கு அனுமதிப்பதில்லை என்ற சங்கற்பத்தைத் தமிழர்கள் செய்தாக வேண்டும். இல்லையேல் தமிழர்கள் அடிமைகளாக, இரண்டாம் தரப் பிரசைகளாக வாழ வேண்டி நேரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரசேகரன் மீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 10

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் உட்பட மூவர் மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணையை கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி டி இஸட் குணவர்த்தனா செப்டெம்பர் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கடந்த வியாழக்கிழமை இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிரிகள் நீதிமன்றத்தில் சமுகமளித்து இருக்கவில்லை.

எதிரிகள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தை மாற்ற வேண்டும் என்று இப்போதைக்கு தாம் கோர விரும்பவில்லை என்று எதிரி தரப்புச்சட்டத்தரணி ஏ.விநாயகமூர்த்தி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மூன்று எதிரிகளும் தற்போது கொழும்பு புதிய செயலகச் சட்டத்தின் ஆறாவது மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். [ஒ-எ]

# தீவுப் பகுதிக்கு ஹமில்டன் விஜயம்

கொழும்பு, ஜூன் 10

பாதுகாப்புத்துறை ராஜாங்க பதில் அமைச்சர் ஜோன் அமரதுங்க, கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத் தளபதி ஹமில்டன் வணசிங்க ஆகியோர் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், நயினாதீவு ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தீவுப் பகுதி மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இன்று நடைபெறவுள்ள மாநாடு ஒன்றுக்கு முன்னோடியாகவே இவர்களின் விஜயம் இடம் பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-த)

# யாழ். கடலேரியில் உயிரிழந்த மீனவரின் சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10

மண்டைதீவுக்கும் கல்முனைக்கும் இடையில் உள்ள கடற்பகுதியில் தொழில் செய்து கொண்டிருந்தபோது படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இரண்டு மீனவர்களினதும் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

கடந்த ஞாயிறு இரவு நடந்த சூட்டுச் சம்பவத்தில் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்பட்ட ஐயாத்துரை யேசுதாசன் [21 வயது] என்பவரின் சடலம் — பாசையூருக்கு நேரே — வெளிச்சக்கட்டைக்குச் சமீபமாக வலையில் சிக்குண்டு சிதைந்துபோன நிலையில் கிடக்கக்காணப்பட்டது.

மற்றொரு வள்ளத்தில் சென்று இறந்தவரான மரியாம்பிள்ளை மரியநாயகத்தின் [40 வயது] சடலம் கல்முனை பந்தலாடி - குமுழமுனைக் கடற்பகுதியில் மிதந்து கொண்டிருந்தபோது மீட்கப்பட்டது. மரியநாயகத்தின் சடலத்தில் தலை இருக்கவில்லை.

மீட்கப்பட்ட இரண்டு சடலங்களும் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன. [அ-51-15-30]

## 'உதயன்' ஆதரவில்

# பல்கலை. நடத்தும் கூடைப்பந்தாட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 10

உதயன் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை (கவுன்ஸில்) நடத்தும் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று மாலை ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கழக மற்றும் கல்லூரி அணிகள் இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும் இச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதியாட்டங்களை மின்னொளியில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று மாலை 3.30 மணிக்கு முதலாவது ஆட்டத்தில் பல்கலைக்கழக ''ஏ'' அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் அணி மோதும்.

மாலை 4.30 மணிக்கு நடைபெறும். இரண்டாவது ஆட்டத்தில் ஷப்றா அணியை எதிர்த்து பற்றிக்ஸ் வி. க. அணி மோதும்.

தொடர்ந்து 11, 12, 13, 15, 16, 17 ஆகிய திகதிகளில் இச்சுற்றுப்போட்டிக்குரிய ஆட்டங்கள் நடைபெறும். [உ

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 12 — 1913

மறைவு: 23 — 05 — 1991

### திருமதி செல்வம் முருகேசு

(கொட்டடி)

திதி: 10—06—1992

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய் இருந்து, எம்மை விட்டுச் சென்ற எங்கள் அன்புத் தாயின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

225/ 2 பலாலி றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம் [21330]

# அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூன் 10

எதிர் வரும் 13 ஆம் திகதி நாடெங்கும் நடைபெறவிருக்கும் — கிராம சேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான — போட்டிப் பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றுவோருக்கான அனுமதி அட்டைகள் நேற்று யாழ். கல்வி அலுவலகத்துக்கு வந்துசேர்ந்தன.

பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை நாளைக்கு முன்பாக தத்தமது கோட்ட அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-3)

# உற்சவம்

தென்மராட்சி, ஜூன் 10

மீசாலை வடக்கு வேம்பிராய் கலட்டியிற் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை நடைபெறும். [ஒ-117]

# நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 1. 30 மணிக்கு நடைபெறும். [உ-162]

★ ★ ★

மூளாய், ஜூன் 10

சுழிபுரம் கொத்தணி பாடசாலைகளின் 15 வயதுக்குட்பட்டோர் விளையாட்டுப் போட்டி நாளை காலை 8 மணிக்கு சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பண்டத்தரிப்பு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வே. மகேசவேல் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். [உ-99]

# தமிழ்த்தின விழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஜூன் 10

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் தமிழ்த்தின விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு கல்லூரி வெளி அரங்கில் அதிபர் திரு. ஆ. அரவிந்தநாதன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், 'உதயன்' நிறுவன நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் ஆகியோரும் கலந்து கொள்வர். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார்.

1990ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோருக்கும் சான்றிதழ் [illegible]. [உ]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு: 13 — 12 — 1962

உதிர்வு: 11 — 05 — 1992

### திருமதி கலாமதி தளையசிங்கம்

எம் இதயத்தில் என்றும் வாழ்ந்து வரும் –
எம் தெய்வமே!
நீ என்றும் எம்முடன் வாழ்கின்றாய் என்பதனால்
நீ எம்மைப் பிரிந்து மாதம் ஒன்றாகியும்
நம்ப முடியவில்லையே!
உன் ஆத்ம சாந்திக்காக என்றும் –
பிரார்த்திக்கின்றோம்.

எனது மனைவியின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட நல்லூர் ப. நோ. கூ. சங்க தலைவர், பொதுமுகாமையாளர், பணியாளர்கள், கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய அங்கத்தவர்கள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வே. தளையசிங்கம் (கணவன்),
மகள், பெற்றோர், சகோதரன்,
சகோதரிகள், மைத்துனர்மார்,
மாமன்மார்.

அரசடி,
கொக்குவில் மேற்கு. [21341]


# அறிவித்தல்

தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை ஆசிரியர், மாணவர்களை 11—06—92 வியாழன் 12.00 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

09-06-1992 [20593] — அதிபர் —

# பிற்போடப்பட்டது

14-6-92 நடைபெறவிருந்த Cake & Sugar Craft கண்காட்சி தவிர்க்க முடியாத காரணத்தால் 18-6-92ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

கண்காட்சி 18ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு காலை 9-00 மணிமுதல் மாலை 6-00 மணிவரை நடைபெறும்.

**Yogi Home Science Academy**
7IB, Nayanmar Veethy,
Nallur,
Jaffna. [சி/2104]

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ராளிலி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L கலை, வர்த்தக வகுப்புகள்

## 93 DAY CLASSES

(8-00 — 3-00)

ஆரம்பம்: 11 - 06 - 1992 வியாழன்

பொருளியல் — திரு. க. கலாகரன்
கணக்கியல் — திரு. S. K. பிரபாகரன்
வர்த்தகம் — திரு. இரகுநாதன்
அளவையியல் — திரு. A. பிரபாகரன்

மற்றும் அனைத்து பாடங்களும்.

★ பாடத் திட்டம் அலகு 1 இலிருந்து ஆரம்பம்.
★ பாடசாலை செல்லாத மாணவர்களின் நன்மை கருதி முற்றிலும் பாடசாலை வசதிகளுடன்.
★ மாணவர்கள் முன் கூட்டியே அனுமதிகளைப் பெறவும்.
★ விடுதி வசதி அளிக்கப்படும்.

[இ-2658]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக் குழுவை இனி எதிர்க்க மாட்டோம்!

## கண்டியில் அனுரா தகவல்

கண்டி, ஜூன் 10
நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நாம் தற்காலிகமாகவே பகிஷ்கரித்தோம். ஆனால் இனி அதனை எதிர்க்கமாட்டோம்.

இப்படிக் கூறினார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்கா:

கண்டியில் நடந்த கட்சிக் கூட்டம் ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறினார்.

சிறுபான்மை இன மக்களை இலகுவில் ஒதுக்கிவிட முடியாது. இனவாதம் பேசுவதை கட்சி முழுமையாக கைவிட வேண்டும். ஏனெனில் தேர்தல்களின் வெற்றியை நிர்ணயிப்பதில் அவர்களும் 'முக்கிய பங்கினை' வகிக்கின்றனர். அவர்களின் பிரச்சினைகளைத் தட்டிக் கழிக்க முடியாது — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [ஒ-5]

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 10
ஆரம்ப பயிலுநர் ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 11 ஆம் திகதி வரை பின்போடப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப் பரீட்சை இம் மாதம் 20 ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. (உ-3)

## மரண அறிவித்தல்கள்

### கதிரமலை குமாரசிங்கம்

[ஓய்வுபெற்ற சுகாதார போதனாசிரியரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் (யாழ். கிளை) திட்டமிடல் அதிகாரியும்]

இவர் ஆத்தியடி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கதிரமலை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், மங்களேஸ்வரியின் அன்புக் கணவரும் வன்னியசிங்கம், சிவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் தியாகராசா [உபஅதிபர் பருத்தித்துறை வேலாயுதம் ம. வி]. இராசவரோதயம், பத்மாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கணேஸ், சுதர்சன், வினோதினி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை மாலை ஆத்தியடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை மயானத்தில் மாலை 4-00 மணிக்கு தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்தியடி,
பருத்தித்துறை.
[21345]

தகவல்:
கு. மங்களேஸ்வரி
[மனைவி]

### சிதம்பரப்பிள்ளை ஆனந்தராஜா

[சுன்னாகம் வர்த்தகர்]

புத்து வெட்டுவானைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை ஆனந்தராஜா கடந்த 8-6-92 அன்று சுன்னாகத்தில் அகால மரணமானார். இவர் த. பொன்னம்பலம் [ஓய்வுபெற்ற உத்தியோகஸ்தர் நீர்ப்பாசன திணைக்களம் - விஸ்வமடு] அவர்களின் மகள் ரேணுகாவின் அன்புக் கணவரும், நீல்பிரசாந்தின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனத்திற்காக கொத்தியாவடி மயானத்திற்கு இன்று காலை10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கச்சனாவடி,
சுன்னாகம்.
[21348]

தகவல்:
த. பொன்னம்பலம்
குடும்பத்தினர்

### வேலாயுதபிள்ளை வரதன்

அளவெட்டி - வேளாவை வேலாயுதபிள்ளை வரதன் [கில்மன் / வேந்தன்] வீரமரணமானார்.

அன்னார் திரு. செ. வேலாயுதபிள்ளை (முகாமையாளர் தேசிய உப்புக்கூட்டுத்தாபனம், வடபிராந்தியம்] — திருமதி வனஜலோஜினி வேலாயுதபிள்ளை ஆகியோரின் ஏக புதல்வனும், திருமதி வத்சாலா பரமநாதனின் அன்புச் சகோதரனும், திரு. அ. பரமநாதன் [தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை: யாழ்ப்பாணம்] அவர்களின் மைத்துனருமாவர்.

அன்னாரின் புகழுடம்பு இன்று புதன்கிழமை பகல் ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, மக்கள் அஞ்சலிக்காக அளவெட்டி மஹாஜன சபை மண்டபத்தில் வைக்கப்பட்டபின்னர் நல்லடக்கத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், ஏற்றுக் கொள்ளவும்.

''திருவதிகை''
வேளாவை,
அளவெட்டி.

தகவல்:
செ. வேலாயுதபிள்ளை
(தந்தை)
[21349]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

## பரீட்சைகள் நடைபெற்றன

யாழ்ப்பாணம், ஜூன் 10
யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெறாமல் போன பரீட்சைகளும் நேற்றைய தினத்திற்குரிய பரீட்சைகளும் ஒரே நேரத்தில் நேற்று நடத்தப்பட்டன.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் கொழும்பில் இருந்து ஞாயிற்றுக்கிழமை எடுத்துவரப்பட்டன. எனினும் அவற்றை ஏற்றி வந்த வாகனம் கொம்படிப்பகுதியில் புதையுண்டதால் உரிய நேரத்தில் வினாத்தாள்களை இங்கு கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டதாக கல்லூரி அதிபர் திரு. அ. ஜெயரத்தினம் தெரிவித்தார். (உ-3-143)

## காங்கிரஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

28 ஆயிரத்து 256 வாக்குகள் பெரும்பான்மையாகப்பெற்று வெற்றியீட்டினார்.

ராஜேஷ் கன்னாவுக்கு ஒரு லட்சத்து 1625 வாக்குகளும், பாரதிய ஜனதா வேட்பாளராகப் போட்டியிட்ட சத்ருகன் சின்காவுக்கு 73 ஆயிரத்து 369 வாக்குகளும் கிடைத்தன. இத் தொகுதியில் போட்டியிட்ட ஏனைய 123 வேட்பாளர்களும் தங்கள் கட்டுப் பணங்களை இழந்தனர்.

அவர்களில் ஜனதா தள் வேட்பாளருக்கு 10 ஆயிரத்து 638 வாக்குகள் கிடைத்தன.

பகுஜன் சமாஜக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட பூலான்தேவிக்கு 753 வாக்குகளும் கிடைத்தன.

பிரபல கொள்ளைக்காரியான பூலான்தேவி சிறையில் இருந்தே போட்டியிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 10 வேங்கைகள் ..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாஸன் கெங்காதரன் — சாம்பல்தீவு], 2 ஆம் லெப். மறைமலை அல்லது விவேகன் [இராசப்பு அன்ரனி — ஆலங்கேணி], 2 ஆம் லெப். மணிமொழி அல்லது ரங்கன் [வல்லிபுரம் கமலதேவன்—திரியாய்].

லெப். அறிவுநம்பி [உருத்திரமூர்த்தி ஸ்ரீகாந்த் — திருமலை], லெப். தர்மராஜ் [ஜோசப் அன்ரனி அலெக்ஸாண்டர் — திருமலை), வீரவேங்கை திருவருட்செல்வன் அல்லது காளிதாஸ் [வைரமுத்து சேரகேஸ்வரன் — சாம்பல்தீவு.]

மன்னாரில் வீரமரணமடைந்த மூன்று வேங்கைகளின் விவரம் வருமாறு:-

மேஜர் ரவிசங்கர் [ஜூலியட் வின்சென்ட் கென்னடி — மன்னார்], லெப்டினன்ட் அரவிந்தன் [வேதநாயகன் பிரான்ஸிஸ் சேவியர் — விடத்தல்தீவு), 2 ஆம் லெப். உதயச்சந்திரன் (சேதுபாண்டித் தேவர் இராமமணி — திருநெல்வேலி, மன்னார்]

## அவர்களையும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முடிவை அடுத்து இந்தியாவில் உள்ள தமது உறுப்பினர்களை இலங்கைக்குத் திருப்பி அழைப்பதை ''புளொட்'' அமைப்பு துரிதப்படுத்தி இருப்பதாகவும் — தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''ஐலண்ட்'' தெரிவித்துள்ளது.

## பாவனைப்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களும் இதனால் அதிகரித்தன.

இப்போது ரூபாவின் மதிப்புக் குறைந்து வருவதால் மேலும் ஒரு சுற்று விலை அதிகரிப்பு இடம்பெறும் என்றும்—

ஆனால் ரூபா மதிப்புக் குறைவதால் ஏற்றுமதித்துறை ஊக்குவிக்கப்படும் என்றும்— [illegible]

## மக்கள் கட்சியில் இழுபறி!

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் பிரமுகர்கள் ஒருவரை ஒருவர் கட்சியிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கையை ஆரம்பித்திருக்கிறார்கள்.

முன்னாள் அமைப்பாளர் திரு. அபயகுணசேகராவையும் மற்றும் ஒன்பது பேரையும் கட்சியிலிருந்து வெளியேற்றிவிட்டதாக பொதுச் செயலாளரான திரு. வை. பி. டி. சில்வா அறிவித்திருந்தார்.

இப்போது திரு. வை. பி. டி. சில்வாவையும், பிரதிச் செயலாளரையும் கட்சியில் இருந்து வெளியேற்றி விட்டதாக திரு. ஒஸி அறிவித்திருக்கிறார். கட்சியின் செயற்குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் புதிய தலைவராகத் திரு சம்ளி குணவர்த்தனா தெரிவு செய்யப்பட்டுள்ளார். கட்சித் தலைவராகப் பதவி வகித்த திரு. ஜே. சி. ரி. கொத்தலாவல காலமானதைத் தொடர்ந்தே புதியவர் தெரிவானார். [அ-எ]

## மின் மாற்றி நிலையம் சேதம்

கொழும்பு, ஜூன் 10
மட்டக்களப்பு மாவட்டம் மயிலம்பாவெளியில் உள்ள மின்மாற்றி நிலையம் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டது.

இத் தாக்குதலை அடுத்து ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாக அப்பகுதியில் நான்கு வீடுகள் தீப்பிடித்துக் கொண்டன என்றும் வீடு ஒன்றில் ஏற்பட்ட தீயை அணைக்க முற்பட்ட போது பெண் ஒருவர் மரணமானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின் போது மின்மாற்றி நிலையம் முற்றாகச் தகர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-த)

### ராஜீவ் கொலைச் சம்பவம்

## ஜெயின் ஆணைக்குழு தனியாக விசாரணை!

புதுடில்லி, ஜூன் 10
ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரணை நடத்த புதுடில்லி மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட இரண்டாவது விசாரணை ஆணைக்குழு அக்கொலை பற்றி, சொந்தமான விசாரணைக்குழு ஒன்றை அமைத்து சுயேச்சையான முறையில் விசாரணை நடத்தவிருக்கிறது.

இந்த விசாரணைக்குழுவுக்கு தலைமைவகிக்க, தமிழ் மொழியில் புலமை மிக்கவரும் மத்திய புலனாய்வுத் துறையில் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பதவிவகித்து வருபவருமான ஒரு குறிப்பிட்ட அதிகாரியை தந்து உதவும்படி, இந்த ஆணைக்குழுவின் தலைவரான ஓய்வு பெற்ற பிரதம நீதியரசா எம். சி. ஜெயின் மத்திய உள்துறை அமைச்சைக் கேட்டுள்ளார்.

தமது ஆணைக்குழுவினால் அமைக்கப்படும். சுயேச்சையான விசாரணைக்குழுவின் தலைவரான இன்ஸ்பெக்டர் ஜெனரல்—

விசேட புலனாய்வுக்குழுவால் தவறவிடப்பட்ட துப்புக்களைத் தேடிச்சென்று விசாரணை நடத்துவார் என்று திரு ஜெயின் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

விசேட புலனாய்வுத்துறை சேகரித்துள்ள அனைத்து வாக்குமூலங்கள் மற்றும் விஷயங்கள் சரியானவையா என்பதை தமது ஆணைக்குழு பரிசோதனை செய்யும் என்றும் ஜெயின் சொன்னார்,

விசேட நீதிபதி எஸ். எம். சித்தீக் முன்னிலையில் விசேட புலனாய்வுத் துறையினர் தாம் நடத்திய விசாரணையின் போது சேகரித்த சாட்சியங்களின் அடிப்படையில் குற்றப் பத்திரிகைகளை தாக்கல் செய்துள்ளனர். அந்த அடிப்படையில் ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

அந்த வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் அதே வேளையில், பொது நலன் கருதி தனது தலைமையிலான ஆணைக்குழுவும் தனது விசாரணையை நடத்தும் என்றும் திரு. ஜெயின் தெரிவித்துள்ளார்.

விசேட புலனாய்வுத்துறை நடத்திய விசாரணையின் அடிப்படையில் நடக்கும் வழக்கு விசாரணையை கவனத்துக்கு எடுத்துக்கொள்ளாது. ராஜீவ் கொலை சம்பந்தமான சூழ்நிலைகள் குறித்து விசாரணை நடத்த ஜெயின் ஆணைக்குழுவுக்கு நிறைய அதிகாரங்கள் இருப்பதாக ஏ. ஜி. நூராணி என்பவர் புரொண் லைன் சஞ்சிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் அபிப்பிராயம் தெரிவித்து உள்ளார்.

### ஜெயின் குழு

ராஜீவ் காந்தியைக் கொலை செய்வதற்கான சதியை உருவாக்கியது, கொலைக்குத் திட்டமிட்டது ஆகிய செயல்களுக்கு ஒருவரா அல்லது பலரா பொறுப்பாக இருந்தார்களா அல்லது ஏதாவது ஏஜன்ஸிகள் பொறுப்பாக இருந்தனவா என்பது பற்றி விசாரணை நடத்தவே மத்திய அரசு ஜெயின் விசாரணை ஆணைக்குழுவை நியமித்திருக்கிறது.

### வர்மா குழு

ராஜீவ் காந்திக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டதில் உள்ள குறைபாடுகள் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க நீதியரசர் வர்மா தலைமையிலான ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இக் குழு தனது விசாரணையை முடித்து விட்டது. இதன் அறிக்கை எதிர் வரும் திங்கள் உள்துறை அமைச்சிடம் கையளிக்கப்படவுள்ளது. — (உ எ)

## தபாலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 10
தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த தெல்லிப்பளை, காங்கேசன் தபாலகங்கள் சமீபத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் பாதிப்படைந்ததைஅடுத்து இன்று தொடக்கம் சுன்னாகம் பட்டினப் பகுதியில் இயங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை தபாலகம் சுன்னாகம் கந்தரோடை வீதியில் நடராசா வைத்தியசாலைக்கு அண்மையிலும் —

காங்கேசன்துறை தபாலகம் சுன்னாகம் மின்சாரசபைச் சந்திக்கருகிலுள்ள தனியார் இல்லத்திலும் இயங்கும்.

அவ்வூர் பொதுமக்கள் தமக்குரிய கடிதங்களை அங்கு பெற்றுக்கொள்ள ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. [உ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org